

கடலூர் மாவட்டம், லால்பேட்டையில் உள்ள லால்கான் மைதானத்தில் நடைபெற்ற, கடலூர் தெற்கு மாவட்ட இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட மாநாட்டில் கலந்துகொண்டு தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரையாற்றினார். வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் எம்.பி., இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் காதர் மொகிதீன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் நவாஸ்கனி, முகம்மது பஷீர், சட்டமன்ற உறுப்பினர் சிந்தனை செல்வன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.




‘கொடிக்காத்த குமரன்’ என்று அழைக்கப்படும் திருப்பூர் குமரன் அவர்களின் 93வது நினைவு நாளை முன்னிட்டு சென்னிமலை வண்டிப்பேட்டை அருகில் உள்ள தியாகி திருப்பூர் குமரன் திருவுருவச் சிலைக்கு திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், திருப்பூர் மாநகராட்சி நான்காம் மண்டல தலைவருமான இல.பத்மநாபன் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் ஒன்றிய செயலாளர்கள் எஸ்.ஆர்.எஸ்.செல்வம் (சென்னிமலை மேற்கு), சி.பிரபு (சென்னிமலை கிழக்கு), பேரூர் செயலாளர் எஸ்.எம்.ராமசாமி, பேரூராட்சி தலைவர் ஸ்ரீதேவி அசோக் உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புக்களின் இந்நாள் முன்னாள் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### சோ.பா.மலர்வண்ணன் வரவேற்புரை!

# கீழையூர் மேற்கு ஒன்றியம் - திருக்குவளையில் உதயநிதிஸ்டாலின் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

## என்.கௌதமன், பவானிகண்ணன், ஆர்.அகிலா சிறப்புரை! இல.மேகநாதன். கோ.சி.குமார் பங்கேற்பு!

நாகை, ஜன. 13 -

நாகை மாவட்டம் கீழையூர் மேற்கு ஒன்றியம் திருக்குவளையில் கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொதுக்கூட்டத்திற்கு கீழையூர் மேற்கு ஒன்றியக் கழக அவைத்தலைவர் வை.சண்முகசுந்தரம் தலைமை தாங்கினார்.

கீழையூர் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சோ.பா.மலர்வண்ணன் வரவேற்புரையாற்றினார். பொதுக்குழு உறுப்பினர் கோ.சி.குமார், ஒன்றிய குழு முன்னாள் தலைவர் ஆர்.ஜி.தமிழரசி, ஒன்றிய துணைச் செயலாளர்கள் கே.சுரேஷ், ஜெயந்திமாசிலாமணி, ஒன்றிய பொருளாளர் எஸ்.வடுகநாதன், மாவட்டக் கழக பிரதிநிதிகள் என்.அசோக்குமார், வி.எஸ்.குமார், பி.நிர்மல் ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன், தலைமைக் கழகப் பேச்சாளர் பவாணி கண்ணன், கீழ்வேளூர் சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் இரா.சங்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல.மேக நாதன், இளம் பேச்சாளர் ஆர்.அகிலா, ஆகியோர் சிறப்புரை யாற்றினார்கள்.

கூட்டத்தில் முன்னாள் ஒன்றியச் செயலாளர் பி.சரவணக்குமார், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் குவளை சோ.கணேசன், பொன். சண்முகநாதன், பி.தியாகராஜன், இ.ஜோதிபாசு, வி.ஆர்.சுப்பரமணியன், வீரராகவன், எம்.செந்தில் குமார், எஸ்.சண்முகராஜேஸ்வரி, கே.ரஞ்சித் குமார், ஆர்.கார்த்தி, வி.குமரேசன், எஸ்.பா லாஜி, எஸ்.செந்தாமரை, பி.சபரி நாதன், எஸ்.துர்க்கா உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள் சுதா அருணகிரி, லென்சோயாசிவபாதம், எஸ்.ஆர்.கலைச்செழியன், கே.எஸ்.தனபாலன், லேகாகாரல்மார்க்ஸ், தா.சேகர், வள்ளிசண்முகநாதன், சாந்திசரவணகுமார் மற்றும் கிளைக் கழக நிர்வாகி கள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், வாக்குச்சவாடி நிலை முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர். முடிவில் ஒன்றிய துணைச் செயலாளர் எஸ்.கே.பார்த்திபன் நன்றி கூறினார்.



விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறியாளர் அணி ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் தலைமையில் பொறியாளர் அணி மாநில துணைச் செயலாளரும் மண்டல பொறுப்பாளர் முனைவர் சி.பிரதீப் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் முன்னாள் அமைச்சர், மாவட்ட அவை தலைவர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம். எல்.ஏ,மாவட்ட பொருளாளர் ரமணன் கலந்து கொண்டார்கள்.மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் செந்தில்நாதன் வரவேற்புரையில் மாவட்டத் தலைவர் சரவணன் நன்றி கூறினார்.ஒன்றிய நகர பேரூர் கழக அளவில் பொறியாளர் அணி QR CODE மூலம் பதிவு செய்து நேர்காணல் நடத்தி நிர்வாகிகளை நியமனம் செய்யவும் மற்றும் அதிக அளவில் உறுப்பினர் சேர்க்கை செய்யவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் மாவட்ட பொறியாளர் அணி துணைத் தலைவர் டி.பி.ஏழுமலை,துணை அமைப்பாளர்கள் ஜி.பி.எஸ் முருகன்,ஜே. ரசூல்பாஷா, தா.வெங்கடாசல பெருமாள்,வே. மலையரசன், கி.பிரபாகரன்,சக்தி சரவணன், மோகன்தாஸ், , சரவணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



பெரம்பலூரில், கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, மேனாள் ஒன்றிய அமைச்சர் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா அவர்களின் வழிகாட்டுதல்படி,பெரம்பலூர் மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி சார்பில், அமைப்பாளர் மகாதேவி ஜெயபால் ஏற்பாட்டில், ஆத்தூர் சாலை கோணேரிப்பாளையம் பிரிவு சாலையில் உள்ள ”முதுயுகம்” ஆதரவற்ற முதியோர் இல்லத்தில் கேக் வெட்டி, மதிய உணவு வழங்கி, புத்தாடைகள், காய்கறிகள் வழங்கி கொண்டாடப்பட்டது.இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் கலந்து கொண்டு முதியவர்களுக்கு உணவுகள் வழங்கினார்கள். இதில் மாவட்ட துணைச் செயலாளர் சன்.சம்பத்,வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் எஸ்.நல்லதம்பி, ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ. வல்லபன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆதவன் (எ)து.ஹரிபாஸ்தர், மாவட்ட பிரதிநிதி எஸ்.அழகுவேல், வழக்கறிஞர் அழகேசன், மகளிர் அணி மாவட்ட தலைவர் பாத்திமா செல்வராஜ், மாவட்ட மகளிர் அணி துணை தலைவர் தனலட்சுமி, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் அங்கயற்கண்ணி, செல்வராணி, வலை தள பொறுப்பாளர்கள் ஜெயப்பிரியா, முருகேஸ்வரி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் புஷ்பவள்ளி ராஜேந்திரன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி தலைவர் தமிழரசி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை தலைவர் சாந்தி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர்கள் நட்சத்திரம், கண்ணகி, நகர மகளிர் அணி அமைப்பாளர் அமுதா, நகர தொண்டர் மகளிர் அணி அமைப்பாளர் சித்ரா, நகராட்சி உறுப்பினர்கள் ஷாலினி, ராதிகா, வலை தள பொறுப்பாளர்கள் சங்கீதா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### வல்லம் ஒன்றியத்தில்

# திண்டிவனத்திலிருந்து புதிய நகரப் பேருந்து சேவை!

## மாவட்டப் பொறுப்பாளர் ப.சேகர் தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஜன. 13 -

விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் கல்லடி குப்பம் கிராமத்திலிருந்து திண்டிவனத்திற்குகீழ் மாம்பட்டு நாட்டார்மங்கலம் வழியாகதிண்டிவனத்திற்கு புதிய நகர பேருந்து சேவையை தொடங்க வேண்டும் என அப்பகுதி மக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர். பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று

கல்லடி குப்பம் கிரா மத்திலிருந்து திண்டிவனத்திற்கு புதியதாக தடம் எண் 10 பேருந்தை வல்லம் ஒன்றிய சேர்மன் அமுதா ரவிக்குமார் முன்னிலையில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் கொடி அசைத்து வைத்து தொடங்கி வைத்தார்.

இதில் மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா,திண்டிவனம் அரசு போக்குவரத்து கழக மேலாளர் சிவக்குமார் ,தொழிற்சங்க தலைவர் ராஜேந்திரன், ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை, துரை, இளம்வழுதி,ஒன்றிய கவுன்சிலர் ரேணுகா வேலாயுதம் ,மாவட்ட கவுன்சிலர் சசிகலா மோகனசுந்தரம், அவைத்தலைவர் ராமகிருஷ்ணன், நிர்வாகிகள் பாண்டியராஜன், பத்மநாபன், கண்ணன். கிருஷ்ணமூர்த்தி, மொடையூர் கண்ணன், கொங்கரப்பட்டு முருகன், பன்னீர்செல்வம் உள்ளிட்ட தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.

# தை மகளே! வருக!

காவிரியில் நீர்பெருகக்
கழனியெங்கும் நெல்விளையக்
கண்குளிரத் தைமகளே! வருக!
பூவிரியத் தேன்சொரியப்
பொங்கும்இன்பம் எங்கும்வரப்
பொன்விடியல் எங்களுக்குத் தருக!

மண்குளிர மரம்குளிர
மகரந்தம் குளிர, எங்கள்
மனங்குளிரத் தைமகளே! வருக!
தண்குளிரின் மென்பனியில்
தரையெங்கும் புல்குளிரத்
தாவிஎழும் புத்துணர்ச்சி தருக!

தென்புலத்தார் அன்புளம்போல்
திராட்சை,ஏலம், முந்திரியைச்
சேர்த்திணைக்கும் தைமகளே! வருக!
கன்னலிலே சாறெடுத்துக்
கட்டிவெல்லப் பாகெடுத்துக்
கனியமுத நெய்ப்பொங்கல் தருக!

தூணாகித் தாங்கிநின்று
சோறூட்டும் உழவருக்குத்
துணையாகித் தைமகளே! வருக!
வீணாகிக் கடலுக்குள்
விழும்ஆற்று வெள்ளத்தை
விளைகின்ற பூமிக்குத் தருக!

ஆதிமொழி யானதமிழ்
அன்னைஇங்கே ஆட்சிமொழி
ஆகும்எனத் தைமகளே! வருக!
சாதிமதப் பூசலெனும்
சழக்குகள் அழுக்குகளைச்
சலவைசெய்து சமத்துவத்தைத் தருக!

கடந்துவந்த கவலைகளைக்
காலடியி லே,மிதித்துக்
கைகொடுக்கும் தைமகளே! வருக!
நடந்தவையோ பயிற்சிஎன்றும்
நாளைஉண்டு மகிழ்ச்சிஎன்றும்
நம்பிக்கை அனைவருக்கும் தருக!

மலர்பொலியும் எழில்நிரப்பி,
மார்கழியை வழியனுப்பி
மணம்பரப்பித் தைமகளே! வருக!
புலர்பொழுதின் ஒளிதிரட்டிப்
பொய்மைகளின் இருள்விரட்டிப்
புதுமைகளை அறிவியலாய் தருக!

பார்வியக்கும் திராவிடரின்
பண்பாட்டு விழுமியத்தைப்
பறைசாற்றித் தைமகளே! வருக!
ஆரியப்பூ ணூலுநரை
ஆணவ,வாய் நீளுநரை
அனுப்பிவைக்கும் நாள்குறித்துத் தருக!

வல்லார்நம் “தளபதி”யின்
வரலாற்றுச் சாதனையை
வாழ்த்தவரும் தைமகளே! வருக!
“நல்லாட்சி நாயகரின்”
நலத்திட்டம் அத்தனையும்
நாட்டுமக்கள் பயனடையத் தருக!

இல்லாமை கல்லாமை
இல்லாத காலம், இதோ
எழுந்ததெனத் தைமகளே! வருக!
எல்லாமும் எல்லார்க்கும்
ஏற்றபடி வாய்த்ததெனும்
இனியதமிழ்ப் புத்தாண்டைத் தருக!



கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்**



### திருக்கோவிலூர் தெற்கு ஒன்றியம் – ஜி.அரியூரில்

# 1500 கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு!

## மாவட்டச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

திருக்கோவிலூர், ஜன. 13 -

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் தெற்கு ஒன்றியம், ஜி.அரியூர் கிராமத்தில் கழக நிர்வாகிகள் மற்றும் தேர்தல் பாக முகவர்கள் உள்பட 1500 பேருக்கு பொங்கல் பரிசு வழங்கும் நிகழ்ச்சி ஒன்றிய கழக செயலாளர் எம்.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் ஜெய்சங்கர், ஒன்றிய கழக நிர்வாகி கள் தணிகாசலம், முருகன், பிரகாஷ், காமராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றியக்குழு துணை தலைவர் தனம் சக்திவேல் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் வசந்தம் க. கார்த்திகேயன் எம்.எல்.ஏ., கழக நிர்வாகி கள் மற்றும் பாக முகவர்களுக்கு பொங்கல் பரிசு வழங்கி பேசினார். அப்போது, தமிழக மக்களுக்கு முதல் அமைச்சர், கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எண்ணற்ற நலத்திட்டங்கள் மூலம் பல்வேறு உதவிகளை செய்து வருகிறார். அதே போல் துணை முதல் அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர், உதயநிதி ஸ்டாலின் இளைஞர் மற்றும் மகளிர் மேம்பாட்டுக்காக தினம் தினம் புதிய திட்டங்களை அறிவித்து வருகிறார். அதே போல் இந்த மாவட்டத்தின் வளர்ச்சிக்கு பொறுப்பு அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகத்துடன் அவ்வப்போது ஆலோசனைகள் செய்து மக்கள் குறைகள் உடனடியாக தீர்க்க உத்தரவிட்டுள்ளார். அந்த அடிப்படையில் மாவட்ட நிர்வாகம் வேகமாக செயல்பட்டு வருகிறது. வருகிற 2026 சட்டமன்ற தேர்தலில் மாவட்டத்தில் உள்ள ரிஷிவந்தியம், சங்கராபுரம், கள்ளக்குறிச்சி மற்றும் உளுந்தூர் பேட்டை ஆகிய 4 சட்ட மன்ற தொகுதிகளிலும் 4 தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் அமோக வெற்றி பெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் கண்ணன், கிளை செயலாளர் ராமு, குணசேகர்,பழனி, சரண் ராஜ், ராஜேஷ், பாலகிருஷ்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் ஒன்றிய கழக இளைஞர் அணி அமைப்பாளர் வினோத் ஏகாம்பரம் நன்றி கூறினார்.



விழுப்புரம் மாவட்டம்வல்லம் ஒன்றியம் கல்லடி குப்பம் கிராமத்திலிருந்து திண்டிவனத்திற்கு புதிய டவுன் பஸ்சை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர், ஒன்றியக் குழுத் தலைவர் அமுதாரவிக்குமார் ஆகியோர் கொடி அசைத்து தொடங்கி வைத்தனர். உடன் மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, துரை, இளம்வழுதி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.



கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கந்தர்வக்கோட்டை வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் சமுத்துவப் பொங்கல் விழா, நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மற்றும் கருத்தரங்கம் கந்தர்வக்கோட்டை பே.மாரி அய்யா வளாகத்தில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையில், ஒன்றிய செயலாளர் மா.தமிழ் அய்யா வரவேற்பில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதவநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் நடைபெற்ற ‘என் உயரினும் மேலான’ நிகழ்ச்சியில் இளம்பேச்சாளர்கள் தஞ்சாவூர் ஜோ.வியானி விஷ்வா, புதுக்கோட்டை தமிழினியன், மயிலாடுதுறை மதுமிதா, தஞ்சாவூர் காவியா ஆகியோர் கருத்துகளை வழங்கினார்கள்.முன்னதாக சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டு பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் கந்தர்வக்கோட்டை தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.பரமசிவம், நகர செயலாளர் எம்.ராஜா, மாவட்ட பிரதிநிதிகள் ஆர்.முத்துக்குமார், ஆர். முருகேசன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் எம்.ஆர்.சண்முக பிரபு, ஒன்றிய கழக நிர்வாகிகள் மு.சண்முகம், என்.அம்பிகாபதி, கலியபெருமாள் உள்ளிட்ட கிளை கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாகப் பங்கேற்றனர்.